ககன்யான் திட்டத்துடன் தொடர்புடைய

100 இஸ்ரோ விஞ்ஞானிகள் திடீர் பதவி விலகல்

■ ஒன்றிய அரசு கடும் அதிர்ச்சி ■ பணி விலகும் விதிகளை கடுமையாக்கி உத்தரவு

புதுடெல்லி, ஜூலை 17: இந்தியாவின் விண்வெளி நிறுவனத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வெளியேறி வருவதை தொடர்ந்து பணியில் இருந்து விலகும் விதிகளை அரசு கடுமையாக்கி உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரோவின் ஏ பிரிவு அறிவியல்/தொழில்நுட்ப அதிகாரிகளிடம் இருந்து தாமாக முன்வந்து விருப்ப ஓய்வு மற்றும், பதவி விலகி வருவதாக கூறப்படுகின்றது. இதுவரை 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பதவி விலகி இருப்பது ஒன்றிய அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமாக்கள் தொடர்பான விதிகளை கடுமையாக்கி இஸ்ரோவின் முக்கிய விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்கு விண்வெளித் துறை ஒரு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த அதிகாரப்பூர்வ உத்தரவில், 'இஸ்ரோவில் சமீபகாலமாக, மதிப்புமிக்க ககன்யான் மற்றும் பிற முக்கிய திட்டங்களுடன் தொடர்புடையவர்கள் உட்பட, இஸ்ரோவின் 'குரூப் ஏ' அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களிடமிருந்து விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமா கோரிக்கைகள் பெருமளவில் வருவதாகவும், இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கவனிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மதிப்புமிக்க மனித விண்வெளிப் பயணத் திட்டமான ககன்யான் மற்றும் பிற முக்கியமான திட்டங்களுடன் தொடர்புடைய ஏ பிரிவு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளிடம் இருந்து வரும் ராஜினாமா அல்லது விருப்ப ஓய்வு கோரிக்கைகளை வழக்கமாக நடைமுறையாக கருதி ஏற்க வேண்டாம். விஞ்ஞானி மற்றும் பொறியாளர் பதவிகளில் உள்ள அல்லது அதற்கு கீழுள்ள அறிவியல் அல்லது தொழில்நுட்பப் பணியாளர்களிடம் இருந்து பெறப்படும் இதுபோன்ற கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின் இறுதி முடிவிற்காக அந்த துறையின் இயக்குநர்களின் தெளிவான பரிந்துரைகளுடன் விண்வெளித்துறைக்கு அனுப்பப்பட வேண்டும்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகள் சதீஷ் தவான் விண்வெளி மையம், திரவ உந்துவிசை அமைப்புகள் மையம், விண்வெளி பயன்பாட்டு மையம், தேசிய தொலை உணர்வு மையம், இஸ்ரோ தொலைத்தொடர்பு, கண்காணிப்பு மற்றும் கட்டளை நெட்வொர்க் மற்றும் முதன்மை கட்டுப்பாட்டு வசதி ஆகிய மையங்களுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மோடி அரசால் நடந்த விபரீதம்

■ இந்தியாவை பொறுத்தவரை விண்வெளித்துறையில் இஸ்ரோ மட்டுமே கோலோச்சியது. ஆனால் 2020ல் தனியார் நிறுவனங்களுக்கு விண்வெளித் துறையை மோடி அரசு திறந்து விட்டது.

■ 2023ல் இந்திய விண்வெளி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதும் நாடு முழுவதும் தனியார் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அவை இஸ்ரோவில் இருக்கும் மூத்த விஞ்ஞானிகளை குறிவைத்து அதிக சம்பளம் கொடுத்து வேலைக்கு எடுத்தன.

■ இந்தியாவில் தற்போது 400க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட விண்வெளி ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் உள்ளன; இவை ரூ. 50 ஆயிரம் கோடிமதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளன. இதில் 2025ம் ஆண்டில் மட்டும் சுமார் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது.

■ பிக்சல், துருவா ஸ்பேஸ், ஸ்கைரூட் ஏரோ ஸ்பேஸ், அக்னிகுல் காஸ்மாஸ், பெலாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் இத்துறையில் முன்னணியில் உள்ளன.

■ இஸ்ரோவில் இருந்து சமீபத்தில் 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் விலகி உள்ளனர். இதில் பெங்களூருவில் உள்ள யுஆர் ராவ் செயற்கைகோள் மையம் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள மையங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் வெளியேறியுள்ளனர்.

■ விலகிய விஞ்ஞானிகளில் சிலர் விண்வெளித் துறை சார்ந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களில் இணைந்துள்ளனர்.

விலகிய முக்கிய விஞ்ஞானிகள் யார்?

■ விலகியவர்களில் மூத்த விஞ்ஞானி விக்டர் ஜோசப் டி என்பவரும் ஒருவர். இவர் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில்ல் 'ஜியோசின்க்ரோனஸ் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள் எம்கே III (ஜிஎஸ்எல்வி எம்கே III) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்தார்.

'ககன்யான்' விண்வெளிப் பயணத் திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள ஏவு வாகனமான எல்விஎம் 3-ன் திட்டத் தலைவராக சுமார் 13 மாதங்கள் பணியாற்றிய பிறகு, விக்டர் ஜோசப் பிப்ரவரி மாதத்தில் பணியிலிருந்து விலகியதாகக் கூறப்படுகிறது.

■ இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர் எஸ். சோமநாத், சென்னையைச் சேர்ந்த விண்வெளித் துறை ஸ்டார்ட்-அப் நிறுவனமான 'அக்னிகுல் காஸ்மோஸ்' இயக்குநர்கள் குழுவில் பார்வையாளராக இணைந்துள்ளார்.

2025 ஜனவரி வரை இஸ்ரோ தலைவராகப் பணியாற்றிய அவர், நிலவின் தென் துருவத்திற்கு அருகில் சந்திரயான்-3 வெற்றிகரமாகத் தரையிறங்கியது மற்றும் இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலமான ஆதித்யா-எல்1 ஏவப்பட்டது உள்ளிட்ட பல முக்கியத் திட்டங்களை வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



இஸ்ரோ எதிர்கொண்ட பெரும் தோல்விகள்

இஸ்ரோவில் இருந்து மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் இஸ்ரோவின் விண்வெளி திட்டங்கள் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்துள்ளன. அதன் விவரம்:

■ இஸ்ரோவின் நம்பகமான 'போலார் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள்' (பிஎஸ்எல்வி) ஏவு வாகனம், ஓராண்டுக்குள் இரண்டு தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்தது.

■ ஜனவரி மாதத்தில், இஓஎஸ் என்1(EOS-N1) புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் பல வணிகரீதியான செயற்கைக்கோள்களைச் சுமந்து சென்ற பிஎஸ்எல்வி-சி62 ஏவு வாகனம், அதன் மூன்றாம் கட்டத்தின் இறுதியில் ஏற்பட்ட பிரச்னைகள் காரணமாகத் திட்டமிடப்பட்ட பாதையிலிருந்து விலகிச் சென்றது.

■ கடந்த ஆண்டு மே மாதம், பிஎஸ்எல்வி- சி61/EOS-09 (ரிசாட்-1பி) ஏவு வாகனம் 529 கி.மீ உயரத்திலுள்ள சூரிய-ஒத்திசைவு சுற்றுப்பாதையை அடையத் தவறியது. மூன்றாம் கட்டத்தின் செயல்பாட்டில் ஏற்பட்ட குறைபாட்டினால், சுமார் 203 வினாடிகளுக்குப் பிறகு எரிபொருள் அறையின் அழுத்தம் (திடீரெனக் குறைந்ததால், அப்பயணம் நிறுத்தப்பட்டு அந்த ரேடார் செயற்கைக்கோள் அழிந்தது.

'பலர் வருகின்றனர், பலர் செல்கின்றனர்' ஒன்றிய அமைச்சர் அலட்சிய பதில்

இஸ்ரோ விஞ்ஞானிகள் பதவி விலகுவது குறித்த கேள்விக்கு ஒன்றிய தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில்,' இஸ்ரோவில் மிகப் பெரிய பணியாளர் படை உள்ளது. சிலர் வெளியேறும்போது பலரும் புதிதாக இணைகிறார்கள். பலர் சென்றுள்ளனர், பலர் வந்துள்ளனர். இதில் எந்த சர்ச்சையும் இல்லை' என்றார்.

கூடங்குளம் தகவல்கள் கசியவிடப்படவில்லை

ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திரசிங் கூறுகையில்,' கூடங்குளம் அணுமின் திட்டத்தில் முக்கியத் தரவுகள் எதுவும் திருடப்படவில்லை அல்லது கசியவிடப்படவில்லை. கூடங்குளம் அணுமின் திட்டம் குறித்த சலசலப்பிற்கும் அந்த முக்கியத்துவம் வாய்ந்த நிலையத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எந்தச் சம்பவமும் நடக்காத நிலையில், இது குறித்து மறுஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?' என்று கேள்வி எழுப்பினார்.

லட்சக்கணக்கானோர் திரண்ட

பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரையில் நெரிசலில் சிக்கி 2 பேர் பலி

200 பேர் காயம்

புவனேஸ்வர், ஜூலை 17: ஒடிசா மாநிலம் பூரியில் உள்ள 12ம் நூற்றாண்டை சேர்ந்த பழமையான ஜெகந்நாதர் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ரத யாத்திரை உலகப் புகழ் பெற்றது.

இந்த ரத யாத்திரை நேற்று நடந்தது. தேர்கள் கோயிலின் கிராண்ட் ரோடு பகுதியில் வந்த போது லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். திடீரென பக்தர்கள் கூட்டம் அதிகரித்ததால் கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதில் கூட்ட நெரிசலில் சிக்கி பலர் மயக்கமடைந்தனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. 60 வயது முதியவர் உள்பட 2 பேர் நெரிசலில் சிக்கி பலியானார்கள்.

தெற்கு இரயில்வே

மின்சாரம் கட்டுமானம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். OHE-CN-DYCEE-26-27-02-243 தேதி:14-07-2026

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் துணை தலைமை மின்சார பொறியாளர்/OHE, கட்டுமானம், தெற்கு இரயில்வே, சென்னை எழும்பூர் அவர்கள், பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

பணி பற்றிய விவரம் : வேளச்சேரி மற்றும் செயின்ட் தாமஸ் மவுன்ட் MRTS (STMM) இடையே OHE பணிகளுக்காக மின்சாரம் வழங்கல் ஏற்பாடுகள்

ஒப்பந்தப்புள்ளி மதிப்பு : ரூ 66,40,925.02

ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகை : ரூ 1,32,800.00

ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும் :14.08.2026 அன்று 15.00 மணி

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in

துணை தலைமை மின்சார பொறியாளர் / OHE, மின்சாரம் கட்டுமானம் /சென்னை - 8

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

nido HOME FINANCE

(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது) பதிவு அலுவலகம்: 5 ஆவது தளம், டவர் 3, விங் B, கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரோல் சாலை, குர்லா (மேற்கு), மும்பை-400 070, பிராந்திய அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் எண்.19, 7ஆவது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை-600 017.

மின்-ஏலம் – சட்டப்பூர்வ 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 கீழ் மின்–ஏலம் மூலம் விற்பனை.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் மேலும் கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோருக்குக் குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழ்க்குறிப்பிட்ட சொத்தானது இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு கடன் நிலுவைகளை மீட்கும் வரை கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. மேற்கூறிய சொத்தானது கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மூலம் பெறப்பட்ட கடனுக்காக M/s. நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது) வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. கடனீட்டுக் கடனீந்தோர் கீழ்க்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தின் அடையாளப்பூர்வ சுவாதீனம் கொண்டுள்ளார்.

வ. எண்.	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	மீட்கப்பட வேண்டிய தொகை	நிர்ணய விலை மற்றும் முன்வைப்பு தொகை	ஏலம் நாள் & நேரம்
4	D எழுமலை (கடன்தாரர்), E சத்யா (உப கடன்தாரர்) மற்றும் ஜோதிமணி R (உப கடன்தாரர்), கிருபா A (உப கடன்தாரர்)	18.05.2026 தேதியின்படி ரூ.21,44,990/– (ரூபாய் இருபத்தொரு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூறு மட்டும்) மற்றும் அதற்குரிய கூடுதல் வட்டி மற்றும் சட்டப்பூர்வ செலவினங்களும் உட்பட. LTVMSTL0000097503.	நிர்ணய விலை: ரூ.81,44,829/– (ரூபாய் எண்பத்து ஒன்று லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்பது மட்டும்) முன்வைப்புத்தொகை: 8,14,482/– (ரூபாய் எட்டு லட்சத்து பதின்நான்காயிரத்து நானூற்று எண்பத்து இரண்டு மட்டும்)	07–08–2026 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணிக்குள் (5 நிமிடங்கள் வரம்பில்லா தன்னிச்சை நீட்டிப்புகளுடன்)

பார்வையிடும் நாள் & நேரம் 27-07-2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை | **அடையாளப்பூர்வ சுவாதீனம் நாள்: 08-05-2026**

கடனீட்டுச் சொத்தின் விவரம்: திருவண்ணாமலை வட்டம், மேல்செட்டிபட்டு கிராமம், அயன் புஞ்சை S.No.53/5, புதிய S.No.64/1a1, புதிய துணைப்பிரிவு S. No.64/11 இல் உள்ள ஏக்கர் 3.98 சென்ட்கள் பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சொத்து. இதில் கிருஷ்ணா நகர் விரிவாக்கம்–2 என்ற பெயர் மற்றும் வடிவில் அமைந்துள்ள பகுதியில் 2153 ச.அடி பரப்பளவு உள்ள விண்ணப்பதாரரின் மனை எண்.20 இன் எல்லைகள்: கிழக்கில்: மனை எண்.19, மேற்கில்: மனை எண்.21, வடக்கில்:20 அடி முதல் குறுக்குத் தெரு, தெற்கில்: திருவண்ணாமலை– தண்டராம்பேட்டை பிரதான சாலை. இதனிடையே அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்.38 அடி, தெற்கு பக்கம்.30 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்.82 அடி, மேற்கு பக்கம். 61.5 அடி. மொத்தம் 2153 ச.அடி. பட்டா எண்.468. சிறப்புக் கட்டுமான ஆர்.சி.சி வீடு திருவண்ணாமலை பதிவு மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை –II துணைப் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

குறிப்பு:– 1) ஏல விற்பனை https://sarfaesi.auctiontiger.net இணையதளம் வழியே இயங்குதளத்தில் நடத்தப்படும். மேலும் மதிப்புறு மின்னஞ்சல், அடையாளச் சான்று & நிழற்படச் சான்று, பான் அட்டை வைத்திருக்கும் மேலும் கேட்பு வரைவோலை/ NEFT/RTGS மூலம் முன்வைப்புத்தொகை பணப்பட்டுவடா செலுத்தியிருக்கும் ஏலதாரர்கள் மட்டும் இந்த "இயங்குதள மின்–ஏலத்தில்" பங்கேற்க தகுதி பெறுவார்கள்.
2) திட்டமிடும் ஏலதாரர்கள் அவர்தம் முன்வைப்புத்தொகையை கேட்பு வரைவோலை/ RTGS/NEFT மூலம் செலுத்தும் முறையில் சமர்ப்பிக்க வேண்டும்: பயனாளி பெயர்: நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், வங்கி: ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கணக்கு எண். 65226845199, சர்ஃபாசி–ஆக்சன், நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், IFSC குறியீடு: SBIN0001593.
3) முன்வைப்புத்தொகையுடன் ஏலப்புள்ளிப் படிவம் இயங்குதள விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 06–08–2026 ஆகும்.
4) விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, இணையதளம் https://sarfaesi.auctiontiger.net காணவும் அல்லது திரு. மௌலிக் ஸ்ரீமாலி தொலைபேசி +91–6351896643/9173528727, உதவியிணைப்பு மின்னஞ்சல் முகவரி: Support@auctiontiger.net தொடர்பு கொள்ளவும்.

கைபேசி எண். 9962784954/8667572466
நாள்: 17.07.2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது)

மழைக்கால கூட்டத்தொடரில்

என்னென்ன மசோதாக்கள் தாக்கல்

ஒன்றிய அரசு பட்டியல் வெளியீடு

புதுடெல்லி, ஜூலை 17: நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடக்க உள்ளது. . இந்நிலையில், மழைக்கால கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் முக்கிய மசோதாக்களின் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. இதுதொடர்பாக மக்களவை செயலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், சர்ச்சைக்குரிய வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த மசோதாவை பரிசீலித்து நிறைவேற்ற அரசு பட்டியலிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதா கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. அப்போது கேரளாவில் சட்டப்பேரவை தேர்தல் நடக்க இருந்த நிலையில் எதிர்க்கட்சிகளிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியதால் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. இதுதவிர, தேசிய பாடலான வந்தே மாதரம் பாடலை அவமதிப்பது அல்லது தடை செய்வது தண்டனைக்குரிய குற்றமாக்கும் வகையில் தேசிய மரியாதை அவமதிப்பு தடுப்பு சட்ட திருத்த மசோதா அறிமுகம் செய்யப்பட உள்ளது. பிறப்பு, இறப்பு தாமதமாக பதிவு செய்வதை தடுக்க பிறப்பு இறப்பு பதிவு திருத்த மசோதா, வருமான வரி திருத்த மசோதா, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு (திருத்த) மசோதா ஆகியவை தாக்கல் செய்யப்பட உள்ளன.

மேலும், தொகுதி மறுவரையை உள்ளடக்கிய மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை செயல்படுத்துவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதா மீண்டும் அறிமுகப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே போல, பிரதமர், முதல்வர்கள் மற்றும் பிற அமைச்சர்கள் கைதாகி 30 நாள் சிறையில் வைக்கப்பட்டால் அவர்களை பதவி நீக்கம் செய்வதற்கான சர்ச்சைக்குரிய மசோதாவும் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

எதிர்க்கட்சிகளுடன் தொடர்பில் உள்ளோம்

மழைக்கால கூட்டத்தொடரை முன்னிட்டு, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்கள் நேற்று ஆலோசனை நடத்தினர். காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சிதலைவர் சோனியா காந்தி இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், "தொகுதி மறுவரையறை திருத்த மசோதாவை அரசு கொண்டு வந்தாலும் அதை நிறைவேற்ற இம்முறையும் அவர்களுக்கு 3ல் 2 பங்கு பெரும்பான்மை கிடைக்காது. இந்த மசோதாவை தோற்கடிக்க ஒன்றிணைந்து வாக்களித்த திமுக, ஆம் ஆத்மி உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம்" என்றார். நீட் உள்ளிட்ட தேர்வுகள் குளறுபடி, அயோத்தி ராமர் கோயில் நன்கொடை திருட்டு உள்ளிட்ட விவகாரங்களை அவையில் எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இல்லத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று நடக்க உள்ளது.

கேரள அரசின் ஓணம் பம்பர் லாட்டரி

ரூ.30 கோடி முதல் பரிசு டிக்கெட் வெளியீடு

திருவனந்தபுரம், ஜூலை 17: கேரளத்தில் கடந்த சில வருடங்களாக ஓணம் பம்பர் லாட்டரியில் முதல் பரிசாக ரூ. 25 கோடி வழங்கப்பட்டு வந்தது. இந்த வருடம் முதல் பரிசுத்தொகை ரூ. 30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வருட ஓணம் பம்பர் லாட்டரியை திருவனந்தபுரத்தில் நேற்று முதல்வர் வி.டி.சதீசன் வெளியிட்டார். வரும் 20ம் தேதி முதல் இந்த டிக்கெட் விற்பனை தொடங்குகிறது. செப்டம்பர் 26ம் தேதி ஓணம் பம்பர் லாட்டரிக்கான குலுக்கல் நடைபெறுகிறது. ஒரு டிக்கெட்டின் விலை ரூ. 500 ஆகும். 2வது பரிசாக தலா ரூ. 1 கோடி வீதம் 20 பேருக்கும், 3வது பரிசாக தலா ரூ. 25 லட்சம் வீதம் 20 பேருக்கும், 4வது பரிசாக தலா ரூ. 5 லட்சம் வீதம் 10 பேருக்கும், 5வது பரிசாக தலா ரூ. 2 லட்சம் வீதம் 10 பேருக்கும் கிடைக்கும். முதல் பரிசுக்கான லாட்டரியை விற்கும் ஏஜெண்டுக்கு மட்டும் ரூ. 3 கோடி கமிஷனாக கிடைக்கும்.

Muthoot Finance

முத்தூட் பைனான்ஸ் லிமிடெட் ஏல அறிவிப்பு

GSTN - 33AABCT0343B1Z5

Registered Office: Muthoot Finance Limited, NH Bypass, Palarivattom, Kochi-682 028, Kerala, India. CIN: L65910KL1997PLC011300, Ph:+91 484 4804000, 2396884, 2394712. mails@muthootgroup.com, www.muthootfinance.com

நிறுவனத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள், மீட்பிற்காக காலதாமதமாக வைக்கப்பட்டு, பலமுறை அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் இதுவரை மீட்கப்படாதவை, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி சம்பந்தப்பட்ட மாவட்ட வாரியாக ஏல மையங்களில் ஏலம் விடப்படும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரின் தகவலுக்காக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் ஏலம் நடத்தப்பட முடியாவிட்டால், ஏலதாரருக்கு பின்வரும் 2வது/3வது ஏல தேதிகளுக்கு அல்லது கொடுக்கப்பட்ட மையங்களில் அடுத்த தேதிகளில் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ஒத்திவைக்க உரிமை உண்டு. ஏல தேதியில் ஏற்படும் எந்த மாற்றமும் ஏல இடத்தில் வெளியிடப்படும்.

மாவட்டம் : திருப்பத்தூர், ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண்: 104B, முதல் தளம், கச்சேரி தெரு., முதல் ஏலத் தேதி : 21.08.2026,11:00AM, இரண்டாம் ஏலத் தேதி : 25.08.2026,11:00AM, மூன்றாம் ஏலத் தேதி : 28.08.2026,11:00AM. ஆலங்காயம்(3870)- MHL- 452, ஆம்பூர் - நேதாஜி சாலை(3637)- MSL- 10699, 11638, 11791, 12586, 12644, 12890, 13553, MHL- 249, 715, 716, 1407, TKM- 800, 700, ஆம்பூர்(0693)- MSL- 28275, TKM- 1595, திருப்பத்தூர்(0509)- MSL- 27432, MHL- 1964, 2147, TKM- 893, MPL- 209, 210, வாணியம்பாடி(2736)- MSL- 18683, 20519, 21574, MAL- 9608, MHL- 934, 2049, TKM- 1105, 1117, SRS- 173, TMS- 334, Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details- திருப்பத்தூர்(0509)- MSV- 550, ஆம்பூர்(0693)- TKM- 470, வாணியம்பாடி(2736)- TKM- 2265, MHL- 1424,

மாவட்டம் : இராணிப்பேட்டை, ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண்: 32, போஸ்ட் ஆபீஸ் தெரு, T.N.E.B அலுவலகத்திற்கு எதிரில், சோளிங்கர், வேலூர் மாவட்டம் - 631 102, தொலைபேசி: 04172 - 261126., முதல் ஏலத் தேதி : 20.08.2026,01:00PM, இரண்டாம் ஏலத் தேதி : 24.08.2026,01:00PM, மூன்றாம் ஏலத் தேதி : 27.08.2026,01:00PM. அம்மூர்(4298)- MHL- 900, அரக்கோணம்(3057)- MSL- 10146, 11590, MAL- 4842, MHL- 187, ஆர்காட் - ஆர்னி சாலை(3614)- MSL- 9627, 9632, TKM- 1415, 1416, TCB- 46, ஆற்காடு(0521)- MSL- 31092, நெமிலி(3781)- MSL- 9580, 9806, 9853, BTO- 98, இராணிப்பேட்டை(3032)- MSL- 8726, 8847, MAL- 2337, 2338, 2410, MHL- 639, TKM- 1581, MLM- 51, சோளிங்கர்(3358)- MHL- 568, 2260, திமிரி(3798)- MSL- 9590, வாலாஜாபேட்டை(1619)- TMS- 113, Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details- வாலாஜாபேட்டை(1619)- MSV- 127, அரக்கோணம்(3057)- MEM- 1, சோளிங்கர்(3358)- MSL- 11795, BTO- 338, ஆர்காட் - ஆர்னி சாலை(3614)- HVB- 9, நெமிலி(3781)- MSV- 175, MHL- 639, MMS- 4, அம்மூர்(4298)- MVS- 33,

மாவட்டம் : திருவண்ணாமலை, ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண்: 62 A, ரயில் நிலையச் சாலை, முதல் தளம், நியூ சரவணா எலக்ட்ரானிக்ஸ் கட்டிடம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம் - 606 803, தொலைபேசி: 04181 - 222888., முதல் ஏலத் தேதி : 20.08.2026,05:00PM, இரண்டாம் ஏலத் தேதி : 24.08.2026,05:00PM, மூன்றாம் ஏலத் தேதி : 27.08.2026,05:00PM. ஆரணி(0589)- MSL- 34213, 36624, சேத்துப்பட்டு(1836)- MSL- 16317, TKM- 1352, 1889, BTO- 88, 150, SRS- 169, செய்யாறு(1418)- MSL- 18725, 19050, 19052, 19499, 19570, MAL- 7319, 7321, 7323, 7409, TKM- 1972, 2162, HDL- 9, MPL- 160, 161, ZIP- 194, கண்ணமங்கலம்(4373)- MSL- 9591, MAL- 6599, 6600, போளூர்(1664)- TKM- 1128, 1166, திருவண்ணாமலை - மெயின் பஜார்(3348)- MSL- 6927, 7801, MHL- 941, TCB- 29, MAP- 2, வந்தவாசி(3994)- MSL- 13319, 13351, 14508, MHL- 1212, 1487, 1543, TKM- 697, BTT- 147, Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details- ஆரணி(0589)- MSV- 664, செய்யாறு(1418)- MSV- 313, போளூர்(1664)- MVB- 17, சேத்துப்பட்டு(1836)- MSL- 16085, தண்டாரம்பட்டு(4196)- SVT- 27,

மாவட்டம் : வேலூர், ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண் 324, RTO அலுவலக சாலை, கட்டம் 2, சத்துவாச்சாரி., முதல் ஏலத் தேதி : 20.08.2026,02:00PM, இரண்டாம் ஏலத் தேதி : 24.08.2026,02:00PM, மூன்றாம் ஏலத் தேதி : 27.08.2026,02:00PM. குடியாத்தம்(0621)- MSL- 28916, 29769, 29920, 30020, 30227, 30235, 30254, 30351, 30513, 30845, 31040, 31428, MAL- 6295, MHL- 1217, TKM- 1273, ZIP- 140, MLM- 140, காட்பாடி(2262)- MSL- 18372, 19608, 20468, 20557, MHL- 1847, BTO- 150, 217, லத்தேரி(3789)- MSL- 8062, 8157, 8175, 8402, 8524, 8557, 9094, 9140, 9581, 9864, MAL- 3088, MHL- 581, 582, 1038, TKM- 943, BTS- 101, பள்ளிகொண்டா(3914)- MSL- 9740, 10838, 11503, TKM- 1198, பேர்ணாம்பட்(3960)- MSL- 12971, 13003, 13730, TKM- 481, 579, MPL- 139, MLM- 113, பொன்னை(5064)- MSL- 2674, 3127, 3387, BTB- 121, வேலூர் - சங்கரன்பாளையம் சாலை(4173)- BTO- 132, வேலூர் டவுன்-சி.எம்.சி(2466)- MSL- 12464, 12552, MHL- 929, 987, TKM- 1179, வேலூர்(0449)- MSL- 38280, 40173, 40220, MAL- 4554, MHL- 1117, 1355, TKM- 801, MLM- 219, BTS- 36, வேலூர்-சத்துவாச்சாரி(2737)- TKM- 956, Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details- வேலூர்(0449)- MSL- 42013, வேலூர் டவுன்-சி.எம்.சி(2466)- MSV- 320, வேலூர்-சத்துவாச்சாரி(2737)- MLM- 688,

மாவட்டம் : காஞ்சிபுரம், ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண்:15/A 51, காமராஜர் தெரு, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் - 631 501, Ph:044 - 27234546., முதல் ஏலத் தேதி : 20.08.2026,11:00AM, இரண்டாம் ஏலத் தேதி : 24.08.2026,11:00AM, மூன்றாம் ஏலத் தேதி : 27.08.2026,11:00AM. காஞ்சிபுரம்(0439)- MSL- 53363, 53808, MAL- 6760, MHL- 1251, 1463, TKM- 1150, 1524, காஞ்சிபுரம்-காந்தி சாலை(2438)- MSL- 10118, 10131, 10198, 10432, 10574, 10706, MHL- 733, BTB- 66, காஞ்சிபுரம்(4190)- MSL- 9858, 10061, 10089, 10179, 10212, 10245, 10352, TKM- 565, MLM- 73, உத்திரமேரூர்(4189)- MSL- 10383, 10443, 10461, 10696, 10912, 10969, 11135, 11439, MAL- 5941, MHL- 1199, 1233, TKM- 459, BTO- 181, MPL- 37, 38, 39, BTS- 175, Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details- காஞ்சிபுரம்(0439)- MSV- 7, காஞ்சிபுரம்-காந்தி சாலை(2438)- MSV- 194, TKM- 700,

மாவட்டம் : திருவள்ளூர், ஏல மையம் : எண். 2588, TNEB தரைத்தளம், பை-பாஸ் சாலை, கக்கலூர், திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 602004., முதல் ஏலத் தேதி : 20.08.2026,09:00AM, இரண்டாம் ஏலத் தேதி : 24.08.2026,09:00AM, மூன்றாம் ஏலத் தேதி : 27.08.2026,09:00AM. திருத்தணி-சித்தூர் சாலை(2598)- MAL- 4072, MHL- 956, TKM- 639, BTO- 253, 254, BTT- 105, 106,

குறிப்பு: வாடிக்கையாளர்கள் ஏலத் தேதிக்கு முன் (20.08.2026) தங்க நகைகளை மீட்டுக் கொள்ளலாம்.

குறிப்பு: ஏலம் எடுப்பவர்கள் தங்கள் அடையாள அட்டை / Pan கார்டு நெ./GST ஸர்டிஃபிகேட்டை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(பதிவு செய்து கொண்டிருக்கும் டீலர்கள் என்றால்) வெற்றிகரமாக ஏலம் கேட்டோர்கள் முழு ஏலத் தொகையையும் RTGS மூலம் டிரான்ஸ்ஃபர் செய்ய வேண்டும்.

Place : வேலூர்
Date : 17.07.2026

For Muthoot Finance,
S.Vijayaragavan, Advocate, Plot No.62, G1, Sri meenakshi amman Flats,
R.R Nagar 2nd Street, Srinivasapuram, Iyyappanthangal, Chennai - 600056

ரயில் டிக்கெட் விரைவாக முன்பதிவு செய்ய

புதிய ஐஆர்சிடிசி இணையதளம் அறிமுகம்

புதுடெல்லி, ஜூலை 17: இந்திய ரயில்வே தனது மறுவடிவமைப்பு செய்யப்பட்ட ஐஆர்சிடிசி புதிய இணையதளத்தின் 'பீட்டா' பதிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தளத்தின் மூலம் விரைவான டிக்கெட் முன்பதிவு, மேம்படுத்தப்பட்ட இருக்கை இருப்பு சரிபார்ப்பு மற்றும் அதிக முன்பதிவு வசதி ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 'தட்கல்' போன்ற அதிக முன்பதிவு தேவைப்படும் நேரங்களில், இணையதளத்திற்கு வரும் அதிகப்படியான பயனர்களின் வருகையை திறம்படக் கையாளும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தளம் தினமும் சராசரியாக 14.5 லட்சம் டிக்கெட் முன்பதிவுகளைக் கையாளுகிறது. மேம்படுத்தப்பட்ட இணையதளம், அதிக முன்பதிவு தேவைப்படும் நேரங்களில் இன்னும் அதிகமான முன்பதிவு கோரிக்கைகளைச் செயல்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது தற்போது சோதனை நிலையில் உள்ளது. முழுமையான பதிப்பு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னதாக, பயனர்களிடமிருந்து பெறப்படும் கருத்துகளின் அடிப்படையில் இதில் மேலும் பல மேம்பாடுகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

GRIHUM

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம்: கிங்ஸ்டன் பார்க் வணிக வளாகம், எண். 19/1, புத்தூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி - 620 017 (தமிழ்நாடு)

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.
கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது,** https://www.bankeauctions.com **மூலமாக 18.08.2026 தேதியன்று மின்–ஏலம் நடைபெறும்.**
விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத்தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
2	கடன் எண். HF0111H21100088 அமுதா சீனிவாசன் (கடன்தாரர்) சீனிவாசன் பி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி 09–07–2025 09–07–2025 தேதியின்படி ரூ. 773034/– (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து மூன்று ஆயிரத்து முப்பத்து நான்கு மட்டும்) மற்றும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டு வட்டி 10.8% உட்பட	கையகம்	ராணிப்பேட்டை மாவட்டம், ராணிப்பேட்டை (முன்னதாக அரக்கோணம்) பதிவு மாவட்டம், வாலாஜா துணை பதிவு மாவட்டம், வாலாஜா வட்டம், தென்கடப்பந்தாங்கல் மதுரா, புலிதங்கல் கிராமம், பஜனை கோயில் தெரு, நத்தம் பழைய S.No.100/1 பகுதி, புதிய S.No.100/4 இல் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் உள்ள சொத்து. எல்லைகள்: கிழக்கு: 3 ½ அடி அகல பொது வழி, மேற்கு: கணேசனுக்குச் சொந்தமான வீடு, வடக்கு: குமரேசனுக்குச் சொந்தமான மனை, தெற்கு: தெரு, அளவீடு: கிழக்கு மேற்கு: 12அடி, வடக்கு தெற்கு: 82 அடி, மொத்தம் 984 ச.அடி அல்லது 91.44 ச. மீட்டர்கள். எல்லைகள்: கிழக்கு: 3 ½ அடி அகல பொது வழி, மேற்கு: கணேசனுக்குச் சொந்தமான வீடு, வடக்கு: குமரேசனுக்குச் சொந்தமான மனை, தெற்கு: தெரு.	Rs. 1685267.00/- (பதினாறு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து இருநூற்று அறுபத்தேழு மட்டும்)	Rs. 168526.70/- (ஒரு லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து ஐநூற்று இருபத்தாறு மற்றும் பைசா எழுபது மட்டும்)	17-08-2026 Before 5 PM	10,000/-	10-08-2026 (11AM – 4PM)	18-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உட்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியில் அல்லது செட்யூல்டு வங்கியிலோ 17.08.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை அவற்றின் மூல பிரதியை முகவரி: கிங்ஸ்டன் பார்க் வணிக வளாகம், எண். 19/1, புத்தூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி – 620 017 (தமிழ்நாடு) மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாட்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 17.07.2026 இடம்: தமிழ்நாடு

ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்